(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். பூராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை என்ற சொல்லுக்கே இடம் இல்லாமல் வாழ்ந்து வரும் நமது இதய தெய்வம் ஆட்சியில் பூம்புகார் மற்றும் தரங்கம்பாடியில் கடல் மீனவர்கள் 30 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். தமிழ்நாட்டிலேயே அதிகமாக மீன் உற்பத்தியாகிற இடங்கள் இந்த இரண்டு இடங்கள் தான். ஆகவே, கருணை கூர்ந்து இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் இதை மறுபரிசீலனை செய்து பூம்புகாரிலும், தரங்கம்பாடியிலும் கப்பல் தளம் அமைக்க ஆவன செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மீன்பிடித் துறைமுகம் தான் மாண்புமிகு அமைச்சருடைய பொறுப்பில் இருக்கிறது. நீங்கள் கப்பல் தளம் கேட்கிறீர்கள். ஆகவே, இதற்குத் தனிக்கேள்வி போடவும்.

வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 110-இன்கீழ் முதலமைச்சரின் அறிக்கை—அரசு அலுவலகங்களின் வேலை நேரம் மாற்றம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி 110-ன் கீழ் அவைக்கு ரு முக்கிய அறிவிப்பை இப்போது வெளியிடுவார்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு அரசு அலுவலர்களின் சங்கங்கள் என்னைச் சந்தித்து தங்களது கோரிக்கைகளை அளித்து அவற்றின் மீது என்னுடன் பேசவேண்டுமென்று கேட்டு இருந்தார்கள். அக்கோரிக்கைகளை ஏற்று நான் அரசுப் பணியாளர்களின் சங்கப் பிரதிநிதிகளை 2—3—1992 அன்று சந்தித்துப் பேசினேன். அப்போது, தற்போது காலை 9-45 மணிக்குத் தொடங்கி மாலை 5-45 மணி வரை பணியாற்றும் அலுவலக நேரத்தை காலை 10-00 மணி முதல் மாலை 5-30 மணி வரை என்று மாற்றி அமைக்குமாறு சங்கப் பிரதிநிதிகள் கோரினார்கள். காலை வேளையில் பேருந்துகளில் கூட்டம் அதிகமாக உள்ளதால் அலுவலகத்திற்கு 9-45 மணிக்கு வருவது என்பது சிரமமாக உள்ளது என்பதையும் குறிப்பாக அலுவலகத்தில்

1992 மார்ச் 11

பணியாற்றும் பெண்கள வீட்டு வேலைகளை முடித்து குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பி விட்டு காலத்தே அலுவலகத்திற்கு வர சிரமமாக உள்ளது என்பதையும் என் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். நான் இக்கோரிக்கையினைப் பரிசீலித்து அரசு அலுவலக நேரத்தை காலை 10-00 மணி முதல் மாலை 5-45 மணி வரை மாற்ற ஆணை பிறப்பித்துள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேர மாற்றம் உடனடியாக அமலுக்கு வரும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–45

இப்பொழுது நான் வெளியிட்ட அறிவிப்பைப் பற்றி ஒரு விளக்கத்தைத் தர விரும்புகிறேன். உடனடியாக அமுலுக்கு வரும் என்றால், நாளை முதல் அமுலுக்கு வரும் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

*திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கிளாரிபிகேஷன். இது தமிழ்நாடு பூராவுக்குமா . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : under rule 110, there is no clarification.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : will this apply to the city of Madras only or to the whole of Tamil Nadu ?

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, this will apply throughout Tamil Nadu. (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றம் நடைபெறும் நேரம் குறித்து . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்றம் நாம் முடிவு செய்கிற நேரத்தின்படி நடக்கவேண்டிய ஒன்று.